# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

## பேச்சுப் போட்டி 2006 (மேற் பிரிவு – 10-13 வயதுப் பிரிவு)

## மண்ணின் தாகம்

எமது தாய் மொழி இனிமை வாய்ந்த தமிழ்மொழி. உலகில் வழங்கிவரும் மொழிகளில் இது மிகவும் தொன்மையானது. தமிழரின் உயரிய நாகரீகமும் கலாசாரமும் உலகிலேயே சிறந்தவை என்று நம்பப்படுகின்றது அல்லவா? புலம்பெயர்ந்த தமிழர்கள் வேறுபட்ட இனத்தவர் மத்தியிலே வாழ்கின்றோம். இதனால் தொன்று தொட்டுப் பாதுகாக்கப்பட்ட தமிழரின் கலாசாரமும் பண்பாடும் மாறிவருகின்றன. இவை சிறிது சிறிதாக மறக்கப்பட்டும் வருகின்றன. மேலை நாட்டுக் கலாசாரம் எங்கள் இளம் சந்ததியினரைத் திசைதிருப்புகிறது. எங்களிற் பலர் தாங்கள் பிறந்த மண்ணிற்கும் கன்னித்தமிழுக்கும் ஆற்றவேண்டிய பங்களிப்பை மறந்து வருகிறார்கள். ஆர்வத்துடன் செந்தமிழ் படிக்கும் இளம் சந்ததியினரின் தொகை குறைகிறதே! ஆங்கிலம் வடமொழி போன்ற பிறமொழிகள் தமிழுடன் கலந்து பேசப்படுகின்றன. இதனால் தமிழின் ஒலித் தூய்மை கெடுகிறது. செந்தமிழ் வழக்கு நலிவு பெறுகிறது. இலக்கண மரபும் மறக்கப் படுகிறது. இப்படிப்பட்ட இடர்ப்பாடுகளால் எம் தாய் நாட்டிற்கும் தமிழ் அன்னைக்கும் ஏற்பட்ட இழப்புகள் – ஏக்கத் தவிப்புகள் – எதிர்பார்ப்புகள் – இவைகளே எம் தாய் மண்ணின் தாகம் ஆகிறது. கனவுலகிற் சஞ்சரித்துக் கற்பனையிற் காலம் போக்குகிறாள் எங்கள் தமிழ் அன்னை. அவள் கானல் நீரிலே தாகம் தீர்த்து வருகிறாளே! இந்நிலை மாறும் காலம் என்று வருமோ?

உலகமொழிகளில் இருந்து அற்றுப்போகும் மொழிகளுள் தமிழும் ஒன்றென்ற கருத்து நிலவுவதை அறிவீர்களா? இன்றைய இளைஞர் தமிழைக் கலப்பின்றிப் பேசுகிறார்களா? ஐந்து நிமிடம் பேசுமுன்பே ஐம்பது ஆங்கிலச் சொற்கள் இடையிடை வெளிப்படுமே!

"அந்தமில் எம்மொழி மாதா – படும்
அல்லலைத் தீர்க்க அறிவு வராதா?" – ஈழம் தந்த வரகவி தங்கத் தாத்தாவின் தவிப்பு உங்களை ஈர்க்கவில்லையா? ஆம்! வளரும் இளைஞர் சமுதாயந்தான் எம் மண்ணின் தாகத்தைத் தீர்க்க வேண்டும். கன்னித் தமிழ்மொழியை உயிரெனக் காத்து முறையுடன் பயின்று பயிரென வளர்த்தல் எம் கடமையாகிறது. நாம் வீட்டிலும் வெளியிலும் வெட்கப்படாது தமிழிற் பேசுவது அவசியமாகிறது. "தேமதுரத் தமிழ் ஓசை உலகம் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவை நனவாக்குவோம். எம் மக்களிடம் ஒற்றுமை கூடிய சகோதரத்துவத்தை வளர்ப்போம். தமிழும், தமிழ்க் கலாசாரமும், இனிதே வாழ தமிழுக்கென்று ஒரு தனிநாடும் மலரவேண்டும். "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற உறுதியுடன் செயல் ஆற்றவேண்டும். எமது மண்ணின் தீராத் தாகத்தைத் தணிக்கக் காலம் வரும். மறுமலர்ச்சிக்குத் தோள் கொடுத்துக் காத்திருப்போம்.

**போட்டி விதிமுறைகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய விபரங்கள்:**
Tele: 0433 088 725 or 02-9758 7970. E-mail: tamilcomp@yahoo.com Web: www.unifundproject.org
P.O.Box 4040 Homebush NSW 2140.